**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போடவும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, அந்த சீர்காழி கூட்டுறவுப் பால் பண்ணைக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்துபவர் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், அவர் சரியாக நிர்வகிக்கவில்லை என்று அதிகமான புகார்கள் வருகின்றன, அப்படிப்பட்ட புகார்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

### கறவை மாடுகள் வாங்குவதற்குக் கடன் வசதி

*40. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தின் மூலம் கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் பெற்றவர்கள் முறையாக அத்தொகையைப் பயன்படுத்துவது எவ்வாறு கண்காணிக்கப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள் அனைத்துக்கும் பொருந்துகின்ற விதிகளின்படி கடன் தொகைகள் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்துக்குள் கறவை மாடுகள் வாங்கப்பட வேண்டும். உறுப்பினர்கள் தகுதியான காரணங்களைக் காட்டினால், இக்காலக் கெடுவை மூன்று மாதங்கள் வரை நீட்டிக்க பால் உற்பத்தி—பால்பண்ணை வளர்ச்சித் துறை ஆணையாளருக்கு அல்லது பால்பண்ணை துணைப்பதிவாளருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடன் வாங்கியவர் வரையறுக்கப்பட்ட காலத்துக்குள் கறவை மாடுகளை வாங்கத் தவறினால் அக்கடன் உரிய காலத்துக்கு முன்னரே முடிக்கப்பட்டு கடன் தொகை முழுவதையும் வசூல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், விதிகளிலுள்ள விதித்துறைகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திருப்பூர் கூட்டுறவுப் பால் வழங்கு சங்கத்தில் கறவை மாடுகள் வாங்குவதற்காக கடன் பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் கறவை மாடுகளை வாங்கினார்கள். இவ்வாறாக எக்காரியத்துக்காக கடன் கொடுக்கப்பட்டதோ அக்காரியத்துக்காக அக்கடன் தொகை பயன்படுத்தப்பட்டது எனினும், கடன் பெற்றவர்களில் சிலர் விதிகளில் சொல்லியுள்ளவாறு சில காலத்துக்கு சங்கத்துக்கு பால் வழங்கவில்லை. அவர்களிடமிருந்து கெடுவடைந்த பாக்கியை வசூலிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் 4]

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவ்வாறு கடன் பெற்றவர்கள் அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்காவிட்டால், அப்படிக் கொடுக்காதவர்கள் மீது என்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, காலம் கடந்து தவணைத் தொகை வசூலிப்பதற்கு அவர்களுக்கு முறைப்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு, வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை அந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது. இப்படி நிறைய புகார்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வந்த காரணத்தால் வெகு சீக்கிரத்தில் அந்தச் சங்கத்தைக் கலைப்பதற்கு நடவடிக்கைகளை அந்தப் பால் துறையினர் எடுத்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் விதி 6 உள்விதி (1)ன் கீழ், இப்பேரவையின் மாற்றுத் தலைவர்களாகக் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன்.

(1) திரு. செ. கந்தப்பன்.

(2) திரு. ந. கணபதி.

(3) திரு. கே. கந்தசாமி.

(4) திரு. எம். ஏ. லத்தீப்.

### (ஆ) அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம்

**Mr. DEPUTY SPEAKER:** I have to announce to the House that I have received notice of a Government Motion of Vote of Confidence in the Council of Ministers.

There is no special rule in relation to such a motion in the Assembly Rules except Rule 68 which generally deals with 'Motions'. However, there is a precedent for such a motion. On 30th June 1952, such a motion of Vote of Confidence in the